FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364161

1. District : Dharmapuri PS: VAC Year: 2026 FIR No.: 5/AC/2026 Date: 28.8.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 27.08.2026 Prior to 15.00 Hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 27.08.2026 Time : 21.30 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 151 306329 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Suo moto
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the Tahsildar, Harur, Dharmapuri District about 45 Km east.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. NAGARAJAN (b) Father's/ Husband's Name : Tr. T.A. MARIAPPAN
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 5.8.2026 (d) Nationality : Indian (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : - Place of Issue : -
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Supdt. of Police (g) Address : O/o the Deputy Superintendent of Police Vigilance and Anti-Corruption, Dharmapuri.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. K. Kalanithi, age 44/2026, S/o. Karunanithi, Village Assistant, Vadagupatti Revenue village, Harur Taluk, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

-

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo moto

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

M. N

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 28/08/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

31.08.2026 at 11.30 hrs

Name: பெயர் Mr. NAGARAJAN,
Rank: நிலை Deputy Superintendent of Police,
Vigilance and Anti Corruption,
Dharmapuri.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் M.நாகராஜன் ஆகிய நான் 27.08.2026-ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 15.00 மணிமுதல் இரவு 21.30 மணிவரையில் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலும், இயக்குநரக உத்தரவு படி 28.08.2026-ம் தேதி பிற்பகல் 11.00 மணிக்கு, தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 –ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

*** *** ***

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா மாறுதல் உத்தரவு, சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், வாரிசு சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், சிறு விவசாயி சான்றிதழ், விதவை சான்றிதழ், கட்டிடஉரிமம், நகைஅடகு கடை உரிமம், ஆகியவற்றை வழங்குவதற்கு பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், கூகுள்பே, போன்பே மற்றும் புரோக்கர்கள் மூலமாகவும் கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், 27.08.2026–ம் தேதி 13.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அவரது அலுவலக தொலைபேசியில் இருந்து அரசு சாட்சிகளை அனுப்புமாறு சம்மந்தப்பட்ட அரசு உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில், அரசு சாட்சிகளான திரு.H.S.பழனி, கூட்டுறவு சார்பதிவாளர், துணை பதிவாளர் அலுவலகம், பொதுவிநியோக திட்டம், தருமபுரி மற்றும் திரு.P.அசோக்குமார், இளநிலை பட்டு ஆய்வாளர், உதவி இயக்குநர் அலுவலகம், பட்டு வளர்ச்சி துறை, தருமபுரி ஆகியோர் 13.45 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் வந்து அறிக்கை செய்தனர். பின்னர் மேற்படி அரசு சாட்சிகள் மற்றும்

காவலர்கள் குழுவுடன் 14.00 மணிக்கு அரசு வாகனம் TN 21 G 0635 என்ற நான்குசக்கர வாகனத்திலும், TN 22 G 1039 என்ற இரண்டுசக்கர வாகனத்திலும் தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 15.00 மணிக்கு திடீர் சோதனை செய்ய சென்றோம். அந்த அலுவலகத்திற்கு உள்ளே நுழைந்தபோது வட்டாட்சியர் இருக்கையில் அமர்ந்திருந்தார். அந்த அறையில் அவருடன் சில அலுவலர்கள் இருந்தனர். வட்டாட்சியர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் என்னையும், என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரை அறிமுகம் செய்துக் கொண்டு, திடீர் சோதனை மேற்கொள்ள வந்த விவரத்தை தெரிவித்து அவர் குறித்து விசாரித்தபோது, தனது பெயர் திருமதி.பி.வள்ளி என்றும், தான் அரூர் வட்டாட்சியராக 25.02.2026 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பிறகு நான் அரூர் வட்டாட்சியர் அவர்களிடம் வட்டாட்சியர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்ய வந்திருக்கும் விவரத்தை தெரிவித்து, திடீர் சோதனைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டேன். அதன் பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் வட்டாட்சியர் அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது நான் வட்டாட்சியர் திருமதி.பி.வள்ளி அவர்களிடம் அரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் குறித்து விசாரித்தேன். அதற்கு அரூர் வட்டாட்சியர் அவரது அலுவலகத்தில் தனக்கு கீழ் மண்டல துணை வட்டாட்சியர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர்கள், வருவாய் உதவியாளர்கள், வட்ட சார் ஆய்வாளர் நிலஅளவை, ஆகியோர்கள் பணிபுரிந்து வருவதாகவும், மேலும் தரைத்தளத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனிவட்டாட்சியர் அலுவலகம் தனிவட்டாட்சியர் திரு.ஜெயசீலன் அவர்கள் தலைமையிலும், ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகம் தனிவட்டாட்சியர் திரு.வெண்மணி அவர்கள் தலைமையிலும் மற்றும் தேர்தல் பிரிவு அலுவலகம் துணை வட்டாட்சியர் திரு.பி.ரஞ்சித்குமார் அவர்கள் தலைமையிலும் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். மேலும் அரூர் வட்டாட்சியர் அலுவலகத்தின் முதல்தளத்தில் இயங்கி வரும் வட்ட வழங்கல் அலுவலகம் துணை வட்டாட்சியர் திரு.சி.பிரபு அவர்களின் தலைமையிலும், மேலும், வட்ட துணை ஆய்வாளர், நில அளவை திருமதி.செ.பாண்டிசெல்வி அவர்கள் தலைமையிலும் இயங்கி வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அரசு சாட்சிகள் முன்னிலையில், நான்

மற்றும் காவல் குழுவினர் மூலம் அலுவலகத்தின் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தின் அலுவலில் இருந்த அலுவலர்கள் ஆகியோர்களை வட்டாட்சியர் அலுவலகத்தின் தரைத்தளத்தின் மையபகுதியில் அமைந்துள்ள அறைக்கு அழைத்துவரப்பட்டது. சோதனையின்போது அரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு ஏற்கனவே தகவல் தெரிவித்ததின் பேரில், அரூர் காவல் நிலைய பெண் தலைமை காவலர்கள் 933 திருமதி.ஜி.தேவி மற்றும் 421 திருமதி.பி.சத்யா ஆகியோர் திடீர் சோதனைக்கு உதவியாக இருக்கும் பொருட்டு 15.30 மணிக்கு வட்டாட்சியர் அலுவலகம் வந்து என்னிடம் அறிக்கை செய்தனர். பின்னர் நான் அனைவரிடமும் திடீர் சோதனை செய்ய வந்திருக்கும் விவரத்தை தெரிவித்து, அரசு சாட்சிகள் முன்னிலையில் அவர்கள் வசம் வைத்திருக்கும் பணம் குறித்து விசாரித்து பணத்தை எடுத்து ஆஜர் செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். அதன்படி அந்த அறையில் இருந்த 25 அலுவலர்கள் அவரவர்கள் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார்கள். அந்த பணம் ரூ.20/- முதல் ரூ.1520/- வரை இருந்தது. அந்த பணம் குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்டபோது, சொந்த பணம் என்றும், செலவிற்கு வைத்துள்ளதாகவும் தெரிவித்தனர். அவர்களது விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் நம்பதகுந்தவாறு இருந்ததால், அவர்களது பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. சோதனையின்போது அலுவலகத்தில் இருந்த 25 அலுவலர்களில், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வடுகப்பட்டி வருவாய் கிராம உதவியாளர் திரு.க.கலாநிதி, வயது 44, த/பெ.கருணாநிதி என்பவரிடம் எதற்காக அரூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்தீர்கள் என்று கேட்க, ஏற்கனவே பணியில் இருந்த அரூர் வட்டாட்சியர் அவர்களின் உத்தரவுப்படி, கடந்த ஓராண்டு காலமாக அரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், வட்டாட்சியர் சொல்லும் அலுவலக பணிகளை செய்து வருவதாக தெரிவித்தார். பின்னர் ஏற்கனவே கிடைத்த ரகசிய தகவலின்படியும், சந்தேகத்தின்பேரிலும் திரு.கலாநிதி அவர்களின் கைப்பேசியை (கைபேசி எண்.7373266619) அரசு சாட்சிகள் முன்னிலையில் பெற்று போன்பே செயலிகளை ஆய்வு செய்ததில், அவர் கணக்கு வைத்துள்ள அரூர் SBI கணக்கு எண். 20027333101-ல் அன்றைய தேதியில் வங்கி

இருப்பு தொகையாக ரூ.3,893.27 இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் தனது சம்பள பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் குறித்த அவரது விளக்கம் ஏற்க தக்க வகையில் இருந்தது. மேலும் அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரது போன்பே செயலியை ஆய்வு செய்ததில், 01.06.2026–ம் தேதி திருமதி.பிரியா என்பவரிடமிருந்து ரூ.50,000/–மும், ஆனந்தகுமார் காமராஜ் என்பவரிடமிருந்து ரூ.50,000/–மும், 05.06.2026–ம் தேதி ஆனந்த் சதாசிவம் என்பவரிடமிருந்து ரூ.50,000/–ம் மற்றும் 08.07.2026–ம் தேதி பொன்னுசாமி வரதன் என்பவரிடமிருந்து ரூ.90,000/–ம் ஆக மொத்தம் ரூ.2,40,000/–ம் அவரது வங்கி கணக்கில் வரப்பெற்றுள்ளதை கண்டறியப்பட்டது. அந்த பணப்பரிவர்த்தனை குறித்து நான், திரு.கலாநிதி அவர்களிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் வட்டாட்சியர் திருமதி.வள்ளி மற்றும் தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியர் திரு.ரஞ்சித்குமார் ஆகியோர்கள் உத்தரவுபடி தான் தேர்தல் பணிக்கு செலவு செய்ததாகவும், தான் செலவு செய்த பணம் ரூ.2,40,000/–த்தை துணை வட்டாட்சியர் திரு.ரஞ்சித்குமார் அவர்களின் உறவினர்கள் மூலம் தனது வங்கி கணக்கிற்கு வர பெற்றதாக கூறினார். இது குறித்து வட்டாட்சியர் திருமதி.வள்ளி அவர்களை விசாரித்தபோது, நாங்கள் திரு.கலாநிதி அவர்களுக்கு தேர்தல் பணி செலவிற்காக எந்தவிதமான பணமும் யாரிடமிருந்தும் பெறச்சொல்லி உத்தரவிடவில்லை என்று தெரிவித்தார். திரு.கலாநிதி அவர்களின் விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் அரூர் வட்டாட்சியர் திருமதி.வள்ளி அவர்கள் அரசு பணி செய்வதற்கு பொதுமக்களிடமிருந்து கையூட்டாக கேட்டு, வடுகப்பட்டி கிராம உதவியாளர் திரு.கலாநிதி அவர்களின் போன்பே–க்கு அனுப்பப்பட்டு, பின்னர் அவரிடமிருந்து தொகைகளை பெற்றிருக்க கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததாலும், மேலும் அவரது வங்கி கணக்கில் பல சந்தேகத்திற்கிடமான பணபரிவர்த்தனை நடைபெற்றிருந்ததாலும், அந்த பணம் பற்றி முழு விசாரணைக்கு உகந்தது என்று தீர்மானிக்கப்பட்டது. பின்னர் திரு.கலாநிதி அவர்கள் அரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிவதற்கு அலுவலக உத்தரவு ஏதேனும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்று வட்டாட்சியர் திருமதி.வள்ளி அவர்களிடம் கேட்க, அவர் அவ்வாறு உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், அவர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து

வருவதற்கு வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்வதில்லை என்றும், ஏற்கனவே இருந்த வட்டாட்சியர்கள் அவர்களுக்கு உதவியாக திரு.கலாநிதி அவர்களை வைத்திருந்ததால், தானும் அவரை தனது அலுவலக உதவியாளராக வைத்துக் கொண்டதாக வட்டாட்சியர் திருமதி.வள்ளி அவர்கள் கூறினார். பின்னர் சம்மந்தப்பட்ட வடுகப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.ஜெயபிரகாஷ் மற்றும் அரூர் வருவாய் ஆய்வாளர் திரு.ஆர்.சின்னன்னன் ஆகியோர்களிடம் விசாரணை செய்ததில், திரு.கலாநிதி அவர்கள் கடந்த ஓராண்டு காலமாக அரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியருக்கு உதவியாக இருந்து வருவதாக கூறினார். பின்னர் அலுவலகத்திற்கு வெளியில் இருந்த அலுவலர்களின் இருசக்கர வாகனங்களை அரசு சாட்சிகள் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் முன்னிலையில் காவல் குழுவினரால் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் பணமோ, பொருளோ கைப்பற்றப்படவில்லை. பின்னர் வட்டாட்சியர் அலுவலகத்தின் போர்டிகோவில் நிறுத்தப்பட்டிருந்த வட்டாட்சியரின் அரசு ஜீப் பதிவு எண்.TN 29 G 1091 வெள்ளை நிற பொலிரோ வாகனத்தை வட்டாட்சியர், அவரது ஒட்டுநர் திரு.தமிழரசன் மற்றும் அரசு சாட்சிகள் முன்னிலையில் காவல் குழுவினரால் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் பணமோ பொருளோ கைப்பற்றப்படவில்லை. பின்னர் அரசு சாட்சிகள் முன்னிலையில் வட்டாட்சியர் அலுவலகத்தின் தரைதளம் மற்றும் முதல்தளத்தில் உள்ள அனைத்து அலுவலர்களின் அறைகள், இருக்கைகள் மற்றும் பதிவறை ஆகியவற்றை முழுவதுமாக காவல் குழுவினரால் சோதனையிடப்பட்டது. அந்த சோதனையில் பணமோ சந்தேகத்திற்குரிய பொருட்களோ கைப்பற்றபடவில்லை. மேலும் வட்டாட்சியர் அலுவலகத்தில் தனிநபர் கையிருப்பு பணபதிவேடு குறித்து வட்டாட்சியர் திருமதி.வள்ளி அவர்களிடம் கேட்க. அதற்கு அவர் இதுவரை தனிநபர் கையிருப்பு பணபதிவேடு அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். இந்த திடீர் சோதனை குறித்து 27.08.2026-ம் தேதி பிற்பகல் 15.00 மணி முதல் இரவு 21.30 மணிவரை செயல்முறை நடவடிக்கைகள் என்னால் தயார் செய்யப்பட்டது. இந்தி திடீர் சோதனையில் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வடுகப்பட்டி வருவாய் கிராம உதவியாளர் திரு.க.கலாநிதி, வயது 44, த/பெ.கருணாநிதி என்பவரின் அரூர் SBI கணக்கு எண்.20027333101-ல் போன்பே செயலி மூலம் 01.06.2026-ம் தேதி திருமதி.பிரியா என்பவரிடமிருந்து ரூ.50,000/-மும்,

ஆனந்தகுமார் காமராஜ் என்பவரிடமிருந்து ரூ.50,000/–மும், 05.06.2026–ம் தேதி ஆனந்த் சதாசிவம் என்பவரிடமிருந்து ரூ.50,000/–ம் மற்றும் 08.07.2026–ம் தேதி பொன்னுசாமி வரதன் என்பவரிடமிருந்து ரூ.90,000/–ம் ஆக மொத்தம் ரூ.2,40,000/–ம் அவரது வங்கி கணக்கில் வரப்பெற்றுள்ளது குறித்து, அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவரால் திருப்திகரமான விளக்கம் தர இயலாத காரணத்தாலும், அவரது வங்கி கணக்கில் சந்தேகத்திற்கிடமான பல பணபரிவர்த்தனைகள் நடைபெற்று இருந்த காரணத்தாலும், அரூர் வட்டாட்சியர் திருமதி.வள்ளி அவர்கள் அரசு பணி செய்வதற்கு பொதுமக்களிடமிருந்து கையூட்டாக கேட்டு, வடுகப்பட்டி கிராம உதவியாளர் திரு.கலாநிதி அவர்களின் போன்பே–க்கு அனுப்பப்பட்டு, பின்னர் அவரிடமிருந்து தொகைகளை பெற்றிருக்க கூடும் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக கண்டறியப்பட்டதாலும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அலுவலக உத்தரவுப்படி எதிரி திரு.க.கலாநிதி, வயது 44/2026, த/பெ.கருணாநிதி, கிராம உதவியாளர், வடுகப்பட்டி வருவாய் கிராமம், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம், என்பவர் மீது தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/AC/2026, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல், எதிரியின் வாக்குமூலம் அசல் ஆகியவற்றை மாண்புமிகு தருமபுரி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

28/8/26

(M.நாகராஜன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
தருமபுரி.